09.03.2022

**DVOP 09/2022 மனுதாரர். காளியம்மாள் , க/பெ. வெங்கடசலாம்**

**மனுதாரர் ஆஜர் சத்யப்பிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுதாரரின் சத்யப்பிரமாண வாக்குமூலம்.**

நான் பழனி தாலுகா நெய்க்காரப்பட்டி போஸ்ட் ஜவஹர் காலனியில் எனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கும் எதிர்மனுதாரர் வெங்கடசலத்திற்கும் கருப்புச்சாமி கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னர் எனது தாயார் சீதனமாக கொடுத்த கதவு எண். 1102 வீட்டில் நானும் எனது கணவரும் வசித்து வந்தோம். கல்யாணமாகி 2 வருடத்தில் எனது 15 பவுன் நகையை வாங்கி அடகு வைத்து விட்டார். நாங்கள் பயிர் செய்து வைத்தால் வியாபாரிகளிடம் பணத்தை வாங்கி விடுவார். நிலமும் எனது தாயார் சீதனமாக வாங்கி கொடுத்தது ஆகும். அந்த வீட்டில் நானும் எனது குழந்தைகளும் குடியிருக்க முடியாத படி 4 மாதத்திற்கு முன்னர் வீட்டை பூட்டி விட்டார். எனது தாயார் வீட்டில் குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் குடியிருந்த போது அங்கும் வந்தும் எனது மகனை அடித்துக் காயப்படுத்தி விட்டார். அவ்வாறு எனது கணவர் என்னையும் குழந்தையையும் துன்புறுத்தி வருகிறார். எனது தாயார் வீட்டிலும் எங்களை குடியிருக்க விடாமல் அடித்து எனது தாயார் வீட்டையும் பூட்டி விடுகிறார். எனது தாயாரையும் அசிங்கமாக பேசுகிறார். எனது கணவர் கொடுமையில் பாதுகாக்க வேண்டும். எங்களுக்கு உயிர் பாதுகாப்பு வேண்டும். எனவே மனு படி உத்தரவாக வேண்டுகிறேன்.

L RAGUPATHIRAJA

Digitally signed by L RAGUPATHIRAJA
Date: 2022.03.09 18:43:36 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.